Gesundheits-
und Fürsorgedirektion
des Kantons Bern

Kantonsarztamt

Direction de la santé
publique et de la
prévoyance sociale
du canton de Berne

Office du médecin cantonal

Rathausgasse 1
3011 Bern
Telefon+41 31 633 79 31
Telefax+41 31 633 79 29
www.gef.be.ch
info.kaza@gef.be.ch

Anne-Marie Maurer
Telefon+41 31 633 79 32
Telefax+41 31 633 79 29
anne-marie.maurer@gef.be.ch

பேர்ண் மாநிலத்திலுள்ள
-சிறுவர் பராமரிப்பகங்களுக்குச் செல்லும் பிள்ளைகளின் பெற்றோருக்கும்,
-அரசினர் பாடசாலைக்குச் செல்லும் மாணவ மாணவிகளின் பெற்றோருக்கும்,
-கல்லூரிகளிலும் துறைசார் தொழிற்கல்லூரிகளிலும் கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்கும்,
-சிறுவர் பராமரிப்பகங்களிலும், அரசினர் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் துறைசார் தொழிற்கல்லூரிகளிலும் தொழில் புரிபவர்களுக்கும்

பேர்ண், ஏப்ரல் 2014

**Tamilische Übersetzung des Merkblattes über Masern für Kitas, Volksschulen, Mittelschulen und Berufsfachschulen**

## சின்னம்மை நோய் பற்றிய அறிவுறுத்தல் ஏடு
## சிறுவர் பராமரிப்பகங்கள், அரசினர் பாடசாலைகள், கல்லூரிகள், துறைசார் தொழிற்கல்லூரிகள்

**சின்னம்மை நோய் (தட்டம்மை, மணல்வாரி ) – ஒழிப்பு 2015:**

- **சின்னம்மை நோய்க்கெதிரான தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளுங்கள், அதனைத் தவற விடாதீர்கள்;**
- **யாருக்கு சின்னம்மை நோய் வந்துள்ளதோ, அவர் உடலில் கொப்பளங்கள் போடத்தொடங்கிய நாளிலிருந்து 4 நாட்களுக்கு வீட்டிலேயே இருக்க வேண்டும்;**
- **சின்னம்மை நோய் பீடித்திருக்கும் பட்சத்தில், இன்னும் சின்னம்மை நோய் வராத, தடுப்பூசி போட்டிராத சேவையிலுள்ள நபர்கள், (1964 ஆண்டும் அதற்குப் பின்பு பிறந்தவர்களும்) கட்டாயம் 21 நாட்களுக்கு வீட்டிலிருக்க வேண்டும்.**

### சின்னம்மை நோய் (தட்டம்மை, மணல்வாரி) என்றால் என்ன?

சின்னம்மை நோயானது, வேகமாகப் பரவுகின்ற தொற்றுநோயாகும். சின்னம்மை வைரஸானது, இருமுகின்ற போது அல்லது தும்முகின்ற போது வெளியேறுகின்ற திரவத்தினால், மனிதருக்கு மனிதர் கடத்தப்படுகின்றது. நோய் தொற்றி ஒன்று தொடக்கம் மூன்று கிழமைகளுக்குள் முதலாவது நோய் அறிகுறி வெளிப்படும்: காய்ச்சல், தடுமல், இருமல், கண் வீக்கம். பிற்பாடு சின்னம்மை நோய்க்குரிய சிவந்த தழும்புகள் ஏற்படும். இது முகத்திலிருந்து உடலின் அனைத்துப் பாகங்களுக்கும் பரவுவதுடன், காய்ச்சலும் அதிகரிக்கும். அதிகமாக இது நடுக்காது வீக்கம் (1000 பேரில் 70-90 பேருக்கு), சில வேளைகளில் நிமோனியா (1000 பேரில் 10 – 60 பேருக்கு), அல்லது மூளையழற்சி (1000 பேரில் 2-20 பேருக்கு) போன்ற சிக்கலான நோய்களையும் தோற்றுவிக்கும். ஊனங்கள் நிரந்தரமாகத் தங்கி விடுவதுடன், சின்னம்மை நோய் அரிதாக மரணத்துக்கும் இட்டுச் செல்லலாம். **வயது வந்தவர்களிடையே இந் நோயானது, அநேகமாக கடுமையாக இருப்பதுடன், அதிகமாக சிக்கலான நோய்களையும் உண்டு பண்ணுகின்றது.**

### சின்னம்மை நோய் எப்போது தொற்றுகின்றது?

சின்னம்மை நோயானது நோய்வாய்ப்பட்ட மனிதருக்கு சிவந்த தழும்புகள் ஏற்படுவதற்கு முன்னமே, மற்றையோருக்குத் தொற்றக் கூடியது. இக் காரணத்தினால், ஒரு நிறுவனத்தில் சின்னம்மை நோய் ஏற்பட்டிருக்கும் யாருடனாவது தொடர்பிருக்கும், தடுப்பூசி பெறாத பிள்ளைகள், வாலிப வயதினர், பணியாளர்கள் அனைவரும் இதுவரையும் நோய்வாய்ப்படாதிருந்தால், எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக, அதாவது அவர்கள் நோயைத் தொற்றிக் கொள்ளும் முன், நிறுவனத்தை விட்டு வெளியேறுவதுடன் வீட்டிலிருக்க வேண்டும்.

### சின்னம்மை நோய்வாய்ப்படும் பட்சத்தில் சிறுவர் பராமரிப்பகத்தில் (KiTa ), அரசினர் பாடசாலைகளில் அல்லது கல்லூரிகளிலும் துறைசார் தொழிற்கல்லூரிகளிலும் என்ன செய்ய வேண்டும்?

சின்னம்மை நோய்த் தடுப்பு மருந்து பெறாதவர்களுக்கும், பெற முடியாதவர்களுக்கும் (உதாரணமாக 9 மாதத்துக்குட்பட்ட குழந்தைகளும், நிர்ப்பீடனத்தொகுதி பலயீனமானவர்களும்) நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்கும், அவர்களைப் பாதுகாப்பதற்கும்,

- நோய்வாய்ப்பட்டவர்கள் தோலில் தழும்புகள் ஏற்பட்ட நாளிலிருந்து 4 நாட்களுக்கு பாடசாலைக்கு வராமல் கட்டாயம் வீட்டிலிருக்க வேண்டும்;

**- 1964 ஆண்டு பிறந்த அல்லது அதற்கும் இளமையான இதுவரை தடுப்பூசி போடாதவர்கள்[1],** ஒரு நோய்வாய்ப்பட்டவருடன் தொடர்பேற்பட்டால், நோய்வாய்ப்பட்டவருடன் கடைசியாக தொடர்பிலிருந்த மூன்று நாட்களுக்குள் (72 மணித்தியாலங்கள்) தடுப்பூசி போடாதிருந்தால் அல்லது அவர்கள் ஏற்கனவே இந்நோய் வராதவர்களாக இருந்தால், **21 நாட்கள் இந்த இடங்களுக்கு வரக் கூடாது**. இந்த விலக்கி வைக்கப்பட்டவர்கள் **வீட்டிலேயே இருக்க வேண்டும்.**

கூட்டாட்சியமைப்பினால் 18. டிசெம்பர் 1970 இல் இயற்றப்பட்ட மனிதரால் கடத்தப்படுகின்ற நோய்களுக்கெதிரான சட்டத்தின் 11 ஆம் 16 ஆம் பிரிவுகளும் (தொற்றுநோய்ச் சட்டம்; 8R 818.101) அதேபோல் 22. மே 1979 இல் கூட்டாட்சியமைப்பினால் நிறைவேற்றப்பட்ட தொற்றுநோயும் காசநோயும் சட்டத்தின் 21 ஆம் பிரிவும் (BSG 815.122), இந் நடவடிக்கைகளுக்கான சட்ட அடிப்படையாகும்.

**சின்னம்மை நோய்க்கெதிராக உங்களை நீங்கள் எவ்வாறு பாதுகாக்கலாம்?**

தடுப்பு மருந்து பெற்றுக்கொள்வது ஒன்றே ஒரேயொரு தடுப்பு நடவடிக்கையாகும் அதாவது இதுவே சின்னம்மை நோய்க்கெதிரான ஒரேயொரு சுயதடுப்பு முறையாகும். கடந்த 30 வருடங்களாக சின்னம்மை நோய்க்கெதிராக தடுப்பு மருந்தேற்றப்படுகின்றது. ஒரு முற்று முழுதான தடுப்பு பாதுகாப்புக்கு பிள்ளைகளுக்கும், வாலிபப்பருவத்தினருக்கும் 1964 ஆம் ஆண்டும் அதற்குப் பின்பு பிறந்த வயது வந்தோருக்கும் சின்னம்மை நோய்க்கெதிராக இரண்டு தடுப்பு மருந்துகள் தேவைப்படுகின்றன. ஒரு வேளை நீங்களோ உங்கள் பிள்ளையோ தடுப்பு மருந்து போடாதிருந்தாலோ அல்லது முற்றுமுழுதான தடுப்பு மருந்து எடுக்காதிருந்தால் (அதாவது ஒரு தடுப்பு மருந்து மட்டும் பெற்றிருந்தால்) பின்பு போடும் **இரண்டாவது மருந்தையும்,** எல்லாமாக இரண்டு தடவைகள் பெற்றுக்கொள்ளும்படி சிபார்சு செய்யப்படுகின்றீர்கள்.

**இப்போது நீங்கள் என்ன செய்யலாம்?**

உங்களதும் உங்கள் பிள்ளையினதும் தடுப்பு மருந்து பெற்றுக்கொண்ட அட்டையைப் (உதாரணமாக www.stopmasern.ch என்னும் இணைய வலையிலுள்ள அபாய – கண்காணிப்பு உதவித்தரவுகளுடன் ஒப்பிட்டு) பாருங்கள். தடுப்பு மருந்து அட்டையில் சின்னம்மைக்கெதிரான தடுப்பு மருந்துகள் கீழ்வரும் பெயர்களால் குறிக்கப்பட்டிருக்கும்: Attenuvax, Moraten, Rimevax, Measles live vaccine, Eolarix, MoRuviraten, Triviraten, Biviraten, MMVax, Rimparix, MMR-II, MMRVaxPro, Pluserix, Priorix, Priorix Tetra. தேவையேற்பட்டால் உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் அல்லது பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையான அளவைப் பெற்றுக் கொள்ளுங்கள். அனைத்துப் பிள்ளைகளும், 1964 ஆம் ஆண்டுக்குப் பின்பு பிறந்த வயதுவந்தோரும் அதற்கும் இளமையானோரும், சுவிற்சர்லாந்தில் அங்கீகரிக்கப்பட்ட சின்னம்மை நோய்க்கு எதிரான தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில், அம் மருந்துகளுக்கான வைத்தியக்காப்புறுதி வருடாந்த ஆரம்பக்கட்டணத்தை (Franchise) 2015 ஆம் ஆண்டு இறுதி வரை செலுத்தத் தேவையில்லை. யார் சின்னம்மை, கூகைக்கட்டு, றுபெல்லா நோய்களுக்கெதிராக தடுப்பு மருந்து பெற்றுக்கொள்கின்றாரோ, அவர் சுயபங்களிப்புக்கட்டணத்தை மட்டுமே செலுத்த வேண்டும். மிகுதிச் செலவை வைத்தியக்காப்புறுதி ஏற்றுக்கொள்ளும்.

**உங்களுக்கு அல்லது உங்கள் பிள்ளைக்கு சின்னம்மை நோய் அறிகுறி தோன்றினால், நீங்கள் என்ன செய்ய வேண்டும்?**

சின்னம்மை நோயாக இருக்கும் என்று சந்தேகிக்கும் பட்சத்தில், நீங்கள் ஒரு வைத்தியருடன் தொடர்பு கொள்ள வேண்டும். நோயுற்றவர் சிறுவர் பராமரிப்பகத்துக்கு அல்லது பாடசாலைக்குச் செல்லக் கூடாது அதாவது நோயுற்ற அந்தப் பிள்ளை சிறுவர் பராமரிப்பகத்திலிருந்து விலகியிருக்க வேண்டும். நீங்கள் வைத்தியரிடம் செல்வதற்கு முன்பே, தொலைபேசி மூலம் வைத்தியருக்கு நோய் பற்றி, முன்னெச்சரிக்கை செய்ய வேண்டும்.

ஒரு வேளை நீங்கள் சின்னம்மை நோயினால் பீடிக்கப்பட்டிருந்தால், அல்லது உங்கள் பிள்ளை சின்னம்மை நோயினால் பீடிக்கப்பட்டிருந்தால் தயவுசெய்து, உடனடியாக நிறுவனத் தலைமைப்பீடத்துக்கு அது பற்றித் தெரியப்படுத்துங்கள். இத் தகவலை நிறுவன தலைமைப்பீடம், மாநில வைத்திய அலுவலகம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, அவர்களுக்குத் தெரியப்படுத்தும்.

மேலதிக தகவல்களைக் கீழ்க்காணும் இணையத்தளப் பக்கங்களில் நீங்கள் காணலாம்:
www.bag.admin.ch/masern உம் www.stopmasern.ch

நட்பு வணக்கங்களுடன்,

மாநில வைத்தியர் அலுவலகம்

Dr. med. Jan von Overbeck
மாநில வைத்தியர்